**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**

**முன்னிலை - திரு.P. கனிமொழி, B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ம் நாள் வியாழக் கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம் தை மாதம் 18 ம் நாள்

TNMY09-000245-2022

**அசல் வழக்கு எண்.17/2022**

1. நாகப்பட்டிணம் - 609309, தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில், குமரன் தெரு, கதவு எண்.74/1 என்ற முகவரியில் வசிக்கும் லேட் தங்கவேல் குமரர், இந்து, 75 வயதுள்ள நடராஜன்

2. நாகப்பட்டிணம் - 609309, மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில், குமரன் தெரு, கதவு எண்.3/74 என்ற முகவரியில் வசிக்கும் லேட் தங்கவேல் குமரர், இந்து, 71 வயதுள்ள சமரசம்

.......வாதிகள்

//எதிர்//

நாகப்பட்டிணம் மாவட்டம் - 609309, தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில், குமரன் தெரு, கதவு எண்.74/1 என்ற முகவரியில் வசிக்கும் லேட் தங்கவேல் குமரர் இந்து, 76 வயதுள்ள பாவாடை

. .....பிரதிவாதி

இவ்வழக்கு தாக்கலான நாள் - 22.02.2022.

இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் - 22.02.2022

இவ்வழக்கின் வழக்குமூலம் 27.03.2003, 12.07.2003, 09.12.2013, 25.01.2022 செம்பனார்கோவில் கிராமத்தில் உற்பத்தி

இவ்வழக்கின் நீதிமன்ற கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்குமாக ரூ.6000/- என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ. 180/- நீ.ம.க.ச பிரிவுகள் 25(d), 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 22.02.2022 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 29.01.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 24.03.2022 அன்று தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும் வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. கடந்த 27.03.2003 தேதியிட்ட தங்கவேல் என்பவர் எழுதிவைத்த பதிவு செய்யப்படாத உயில் சாசனம் செல்லத்தக்கது என விளம்புகை பரிகாரம் அளித்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. தாவா சொத்தில் வாதிகளுக்குரிய பாகத்தை பிரதிவாதி வேறு நபர்களுக்கு விற்பனையோ அல்லது வேறு வகையில் வில்லங்கமோ ஏற்படுத்தக்கூடாது என்றும், வாதிகளுக்கு உரிய பாகத்தில் அவர்களது அனுபவத்தை பிரதிவாதியோ அவரது ஆட்களோ, அல்லது அவரது முகவரோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணையிடப்படுகிறது.

3. செலவுத்தொகை இல்லை.

## SCHEDULE OF PROPERTY

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில் குமரன் தெரு,,

| | | |
|---|---|---|
| செம்பனார்கோயில் குமரன் தெருவில் தெருவிற்கு | - | கிழக்கு |
| பஞ்சாயத்துபோர்டு சாக்கடைக்கு | - | மேற்கு |
| சிவகுருநாதன் சோகு செங்குந்தர் அவர்கள் வீட்டிற்கு | - | வடக்கு |
| என்.ஆர்.முத்தையா செங்குந்தர் வகையறா வீட்டிற்கு | - | தெற்கு |

இந்த நான்கு எல்லைக்குள் கதவு எண்.3.75 கொண்ட நாட்டு ஓட்டுவில்லை வீடு, இதன் கீழ்நிலம், கொல்லைவால்வீச்சு , மரந்தழை வகையறா கிணறு ஆகிய சொத்துக்களுக்கான விபரம்

மேற்படி வீட்டின் வாசலில் உள்ள (முன்புறம்) கிழமேல் 5 அடி கொண்ட ஆலோடியை மேற்படி எனது குமாரர்கள் மூவரும் பொதுவில் புழங்கிக்கொள்ள வேண்டியது.

மேற்படி 5 அடி கொண்ட பொது ஆலோடியை நீக்கி பாக்கி உள்ள வீடானது கிழமேல் 70 அடி கொண்டது அதனை மேற்கிலிருந்து கிழமேலாக 23 அடி 4 அங்குலம் அளவிற்கு எனது குமாரன் பாவாடையும், அடுத்ததாக உள்ள 23 அடி 4 அங்குலம் அளவிற்குண்டான பகுதியை எனது குமாரன் நடராஜனும், அடுத்ததாக உள்ள 23 அடி 4 அங்குலம் அளவிற்குண்டான பகுதியை எனது குமாரன் சமரசமும் தானாதி வினிமய விற்கிரயங்களுக்கு யோக்கியமாய் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அடைந்து கொள்ள வேண்டியது.

மேற்படி வீட்டில் தெருநிலைப்படி முதல் கொல்லை நிலைப்படி வரை கிழக்கு மேற்காக செல்லும் நடைபாதையை ( $3\frac{1}{2}$ அடி அகலம் கொண்ட நடைபாதையை மேற்படி எனது குமாரர்கள் மூவரும் பொதுவில் புழங்கிக் கொள்ள வேண்டியது.

அவர்அவர் அடையும் வீடு பகுதிக்கு முன்புறம் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட பொது நடைபாதையை நீக்கி தென்புறம் உள்ள திண்ணை மற்றும் கரை பகுதியை மேல்சொன்னபடி 23 அடி 4 அங்குல அளவிற்கு அடையும் நபர்கள் அதன், அதன் நேர் ஒழுங்கிற்கு அடைந்து கொள்ள வேண்டியது.

பொது நடைபாதையில் மற்றவருக்கு இடையூறு செய்யும் வகையில் மற்றவர்கள் எந்தவிதமான பொருட்களையும் தட்டுமுட்டு ஜாமான்களையும் சைக்கிள்களையும் போடக்கூடாது.

மேற்படி வீட்டின் கொல்லைபுற தாழ்வாரம் கிழமேல் 7 அடி கொண்டது. மேற்படி கொல்லைபுற அருகாவில் இருந்து வடபுறமாக தென்வடல் 10 அடி அளவிற்குண்டான தாழ்வார பகுதியை எனது குமாரன் பாவாடையும், அடுத்த 10 அடி பகுதியை நடராஜனும் அடுத்த 10 அடி பகுதியை சமரசமும் அடைந்து கொள்ள வேண்டியது.

மேற்படி கொல்லை நிலையில் இருந்து 7½ அடிக்கு பின் கிழமேல் 3 அடி கொண்ட தென்வடல் பாதையை மேற்படி எனது குமாரர்கள் மூவரும் பொதுவில் புழங்கிக் கொள்ள வேண்டியது.

மேற்படி கிழமேல் 3 அடியும் தென்வடலாகவும் அமைந்துள்ள பொதுபாதை நீக்கி, கீழ்புறம் அமைந்துள்ள கொல்லை பகுதியை தென்புறம், தென்வடல் 11.3 அடி பகுதியை பாவாடையும், நடுவில் தென்வடல் 11.3 அடியை நடராஜனும், வடபுறம் தென்வடல் 11.3 அடி பகுதியை சமரசமும் அடைந்து கொள்ள வேண்டியது. மேற்படி கொல்லையில் உள்ள கிணற்றினை எனது குமாரர்கள் நடராஜன் 1 சமரசம் 2 இவர்கள் மட்டும் பொதுவில் புழங்கிக் கொள்ள வேண்டியது.

மேற்படி வீட்டின்தெரு அருகாலுக்கு தென்புறம் அமைந்துள்ள சிறிய தூன்பகுதியை பாவாடையும், நடராஜனும் சமரசமும் பொதுவில் புழங்கிக் கொள்ள வேண்டியது.

செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01ம் நாள் இடப்பட்டது.

(ஒப்பம்)P. கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி